

பெரம்பலூர், குன்னம் சட்டமன்ற தொகுதி தேர்தல் ஆலோசனைக் கூட்டம் பெரம்பலூர் ராகேஷ் பார்க் ரெசிடென்சியில் நடைபெற்றது. மண்டல பொறுப்பாளர், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், கே.என்.அருண்நேரு.எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படியும், கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களது ஆலோசனையின்படியும் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் மற்றும் சட்டமன்றத் தேர்தல் 2026 வேப்பனபள்ளி, ஒசூர், தனி சட்டமன்ற தொகுதி வாரியான கூட்டம் சூளகிரியில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தமிழ்நாடு உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சரும், சட்டமன்ற தேர்தல் மண்டல பொறுப்பாளருமான அர.சக்கரபாணி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும், ஓசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாவட்ட அவை தலைவர் யுவராஜ்,மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் அரியப்பன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் வடிவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### பொதுமக்கள் முழுமையாக முதலமைச்சருக்கு ஆதரவு!

# தி.மு.க. செயல்வீரர்கள் உற்சாகமாக களப் பணியாற்றுகின்றனர்!

## புதுக்கோட்டையில் அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

புதுக்கோட்டை, மே.23-

பொதுமக்கள் முழுமையாக தமிழ்நாடு முதலமைச்சருக்கு தான் ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். எந்த காலத்திலும் இதுபோல் திமுக தோழர்கள் உற்சாகமாக இருந்து பார்த்ததில்லை. தற்போது அவர்கள் உற்சாகமாக இருந்து எங்களுக்கு உற்சாகமூட்டி இருக்கின்றனர் என்று அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

புதுக்கோட்டையில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே என் நேரு பேட்டி வருமாறு:-

தி.மு.க.வில் தொடர்ந்து கட்சி நிர்வாகிகள் கூட்டம் நடைபெறுகிறது சென்ற இடங்களில் எல்லாம் தி.மு.க. கட்சி தோழர்கள் உற்சாகமாக சிறப்பாக பணியாற்றி வருகின்றனர். ஏழாவது முறையாக தி.மு.க. தான் ஆட்சி அமைக்கும். மீண்டும் முதலமைச்சராக மு க ஸ்டாலின் வருவார்.

நிர்வாகிகளிடம் பேசும் போது அரசு சார்பில் என்னென்ன செய்ய வேண்டும் என்னென்ன திட்டங்கள் விடுபட்டு உள்ளது.என்றெல்லாம் திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கூறியிருக்கின்றனர்.. அதையும் நான் குறித்து வைத்துள்ளேன். அரசு சார்பாக செய்ய வேண்டிய பணிகளை செய்து முடிப்போம்.

எதிர்க்கட்சிகள் ஆரம்பத்திலிருந்து திமுகவையும் திமுக தலைவரையும் விமர்சனம் செய்து கொண்டு தான் இருக்கிறார்கள் அதனை தாண்டி தான். பத்து தேர்தல்களிலும் தி.மு.க. வெற்றி அடைந்துள்ளது. அதேபோல் இந்த தேர்தலிலும் தி.மு.க. வெற்றி பெறும்.

பொதுமக்கள் முழுமையாக தமிழ்நாடு முதலமைச்சருக்கு தான் ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். எந்த காலத்திலும் இதுபோல் திமுக தோழர்கள் உற்சாகமாக இருந்து பார்த்ததில்லை. தற்போது அவர்கள் உற்சாகமாக இருந்து எங்களுக்கும் உற்சாகமூட்டி இருக்கின்றனர்.

என்னிடம் 41 தொகுதி பொறுப்பு கொடுத்துள்ளனர். அதில் இரண்டு மூன்று தொகுதிகளை தவிர மற்ற அனைத்து தொகுதிகளும் திமுகவுக்கு சாதகமாகத் தான் உள்ளது. புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதி திமுகவுக்கு வேண்டும் என்று அனைவரும் கேட்டுள்ளனர் அதனை முடிவு செய்ய வேண்டியது தமிழ்நாடு முதலமைச்சர் திமுக தலைவர் தான் நான் முடிவு செய்ய முடியாது.

இவ்வாறு அமைச்சர் கே என் நேரு பேட்டியளித்தார்.

# சீனா, சிங்கப்பூர், தாய்லாந்தில் கொரோனா பரவல் அதிகரிப்பு!

புதுடெல்லி, மே 23 -

ஆசியாவில் மீண்டும் புதிய கொரோனா அலை உருவாகியுள்ளது. இந்தியாவில் கொரோனா தொற்றால் 257 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தென்கிழக்கு ஆசியாவில் கொரோனா தொற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை சமீபகாலமாக அதிகரித்து வருகிறது. தற்போது பரவி வரும் ஒமைக்ரான் பிஏ.2.86 ஜேஎன்1 வகை கொரோனா வைரஸ் பரவல் அதிகம் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. மக்கள்தொகை நெருக்கம் மிகுந்த சிங்கப்பூர், சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் எடுக்கப்பட்ட மாதிரிகளில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து, முக்கிய நகரங்களில் சுகாதார துறையின் செயல்பாடுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. மக்கள் புதிதாக கொரோனா தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு தாய்லாந்து, ஹாங்காங், சிங்கப்பூர் அரசுகள் அறிவுறுத்தியுள்ளன.

இதனிடையே, இந்தியாவில் கொரோனா பரவல் கட்டுக்குள் உள்ளதாக ஒன்றிய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. மே 19ம் தேதி நிலவரப்படி, நாட்டில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 257 ஆக உள்ளது. நாட்டின் மக்கள் தொகையை கருத்தில் கொள்ளும் போது இது மிகமிக குறைவு என்று குறிப் பிட்டுள்ளது. இருப்பினும், நிலைமையை சுகாதார அமைச்சகம் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் அர.சக்கரபாணி – பிரகாஷ் எம்.எல்.ஏ. சிறப்புரை!

கிருஷ்ணகிரி, மே.23-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் மற்றும் சட்டமன்றத் தேர்தல் 2026 வேப்பனபள்ளி, ஒசூர், தனி சட்டமன்ற தொகுதி வாரியான கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ் தலைமையில் சூளகிரியில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் தமிழ்நாடு உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சரும், சட்டமன்ற தேர்தல் மண்டல பொறுப்பாளருமாண அர.சக்கரபாணி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி, சட்டமன்ற தேர்தல் தொடர்பாக கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தை சேர்ந்த வேப்பனபள்ளி, ஓசூர், தளி சட்டமன்ற தொகுதிகளை சேர்ந்த நிர்வாகிகள் வாக்காளர்களை வீடு, வீடாக சென்று நேரில் சந்தித்து கடந்த நான்காண்டுகளாக கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் செய்யப்பட்ட மக்கள் நலத் திட்டங்களான மகளிர் உரிமைத் தொகை, மகளிர் அரசு பேருந்தில் கட்டணம் இல்லா பேருந்து பயணம், கல்லூரி மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டம்,கல்லூரி மாணவர்களுக்கு தமிழ் புதல்வன் திட்டம், மக்களை தேடி மருத்துவம் உள்ளிட்ட மக்கள் நலத் திட்டங்களை எடுத்துக் கூறி திமுக ஆட்சியின் சாதனைகளை விளக்க வேண்டும் எனவும், நடைபெற உள்ள 2026 சட்டமன்றத் தேர்தலில் ஏழாவது முறையாக திமுக ஆட்சியை அமைக்க அனைவரும் அயராது பாடுபட வேண்டும். கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்பதற்கு நீங்கள் அனைவரும் அயராது உழைக்க வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும், ஓசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் அரியப்பன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் வடிவேல், மாவட்ட துணை செயலாளர்கள் சின்னசாமி , புஷ்பா சர்வேஷ், பொருளாளர் சுகுமாரன், ஓசூர் மாநகர துணை மேயர் ஆனந்தையா, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வீரா ரெட்டி, எல்லோரா மணி, கிரீஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெயராமன் ,சீனிவாசன், முனிராஜ், அப்துல் கலாம், தனலட்சுமி, அருணா பூசன், ஒன்றிய செயலாளர்கள் பாக்கியராஜ், நாகேஷ், ரகுநாத், கருணாகரன், ஸ்ரீனிவாசலு ரெட்டி, திவாகர், கஜேந்திரமூர்த்தி, சின்ராஜ், தணிகாசலம், ஸ்ரீதர், பேரூர் கழக செயலாளர்கள் சீனிவாசன், தஸ்தகீர் , ஒசூர் மாநகர அவைத்தலைவர் செந்தில்குமார், கோபாலகிருஷ்ணன் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் , தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தருமபுரி மேற்கு மாவட்டம், காரியமங்கலம் மத்திய ஒன்றியம் இல. கிருஷ்ணன் அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 21.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### சென்னை தெற்கு – காஞ்சிபுரம் வடக்கு – சேலம் கிழக்கு – புதுக்கோட்டை தெற்கு மாவட்டங்கள்

## பொதுக்குழு உறுப்பினர்கள் பொறுப்புக்களுக்கான தேர்தல்

## தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் சென்னை தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் சைதை சம்பத் – காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் எம்.டி. சண்முகம் – சேலம் கிழக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் ஷேக்மொய்தீன் – புதுக்கோட்டை தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் சீனி. பழனியப்பன் ஆகியோர் உடல் நலிவுற்று மறைவெய்திய காரணத்தால் மேற்கண்ட மாவட்டங்களுக்கான பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளுக்குப் போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, மே 20 (செவ்வாய்கிழமை) அன்று ரூ.25000/– வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்" என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிற்கு தலா ஒருவர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவர்களது மனு ஏற்கப்பட்டு,

**சென்னை தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக**

**திரு. களக்காடி எல்லப்பன்**
5/3, 72வது தெரு,
ஆர்.வி. நகர்,
ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600083 **அவர்களும்;**

**காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக**

**திரு. ஜிஜேந்திரன் ராமு,**
4, கம்பர் தெரு,
நந்திவரம் - கூடுவாஞ்சேரி,
செங்கல்பட்டு - 603202 **அவர்களும்;**

**சேலம் கிழக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக**

**திருமதி. என். அன்னபூரணி**
டி.எஸ்.பி. தோட்டம்,
ஊனத்தூர் வழி,
தலைவாசல், ஆத்தூர் தாலுக்கா,
சேலம் மாவட்டம்.

**புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக**

**திரு. ஆர். கருப்பையா**
228, புதூர், ராயவரம் அஞ்சல்,
திருமயம் தாலுக்கா,
புதுக்கோட்டை மாவட்டம். **ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18.
நாள் : 21–05–2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.



மறைந்த முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் மகனும் ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளருமான மறைந்த வீரபாண்டி செழியன் அவர்கள் 24 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி வீரபாண்டி ஒன்றியம் பூலாவரியில் உள்ள அவரது நினைவிடத்தில் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர்.சிவலிங்கம் தலைமையில் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் சின்னதுரை, மேட்டூர் கோபால், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் டாக்டர் தருண், சூர்யா, சிந்து, ராம்குமார், பிருந்தா செழியன், சந்திரமோகன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் சார்பு அணி, குடும்பத்தினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

### தி.மு.க. மாணவர் அணி

# திண்டுக்கல் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் **திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்** - திண்டுக்கல் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்

### திண்டுக்கல் மாநகரம்

அமைப்பாளர் - பி.கே.மதுசூதன், சி20, அரசு ஊழியர் குடியிருப்பு, பேருந்துநிலையம் எதிரில், திண்டுக்கல்.

துணை அமைப்பாளர்கள் - 1) ச.சஞ்சிவ்குமார், 25-306 9வது தெரு மேட்டுப்பட்டி, திண்டுக்கல். 2) உ.ரஹ்மான், 64-65 பேட்டை ரோடு, பேகம்பூர் அஞ்சல், திண்டுக்கல். 3) சு.அசோக், 28-81ஏ பாரதிபுரம், நாகல்நகர் 1வது தெரு, திண்டுக்கல். 4) ஏ.ஆர்.கிஷோர், 1-4, முத்து நகர், ஆர்.எம். காலனி, 4வது கிராஸ், திண்டுக்கல். 5) ஒ.வீரமணி, எம்.எல்-2, ஆர்.எம்.காலனி, 3வது குறுக்குத் தெரு, திண்டுக்கல். 6) ரா.புஷ்பலதா, 48-பி கோபால் நகர், ஒய்.எம்.ஆர்.பட்டி, திண்டுக்கல். 7) ர.கிஷோர்குமார், 37 மெங்கில்ஸ் ரோடு, நாகல் நகர், திண்டுக்கல். 8) பா.விவேக் ஜான்சன், வைத்தியலிங்கம் நகர் 2வது தெரு, மொட்டணம்பட்டி ரோடு, மேட்டுப்பட்டி திண்டுக்கல்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 21-05-2025.

**இரா. ராஜீவ்காந்தி,**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி




தருமபுரி மாவட்டம் அரூரில் ஒன்றிய அரசின் தொழிலாளர்களுக்கு எதிரான நான்கு சட்ட தொகுப்புகளை திரும்பப் பெற வேண்டும்,ஓய்வூதியம் உள்ளிட்ட 14 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி அகில இந்திய அளவில் தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு சார்பில் நடைபெற்ற பொது வேலை நிறுத்தம் மற்றும் கண்டன ஆர்ப்பாட்டத்தை அரூர் நகர கழக செயலாளர் முல்லை ரவி துவக்கி வைத்தார்.தொ.மு.ச. மாநில பேரவை மாநில செயலாளர் பழனி தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் சி.ஐ.டி.யு,ஐ.என்.டி.யு.சி உள்ளிட்ட தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 100 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு ஒன்றிய அரசிற்கு எதிராக கோசங்களை எழுப்பினர்.




சேலம் கிழக்கு மாவட்டம் தலைவாசல் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் சார்வாய் ஊராட்சியில் கழக அரசின் நான்காண்டு சாதனைகள் விளக்கம் பொதுக்கூட்டம் ஒன்றிய செயலாளர் சாத்தப்பாடி மணி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் சின்னதுரை, தலைமைக் கழக பேச்சாளர் பாடகர் செ.மணி, வடக்கு ஒன்றிய செயலாளர் பாலமுருகன், முன்னாள் ஒன்றிய செயலாளர் லட்சுமணன், ஜெயபாலன், தேவேந்திரன், கிருஷ்ணன், முன்னாள் எம்.எல்.ஏ. குணசேகரன், கண்ணுச்சாமி, மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மேலும் கூட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர், கழகத் தலைவர் தளபதி போல் இருவர் வேடமிட்டு மேடையில் அமர்ந்திருந்தனர்.